# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

4-12-66



மேயர் ★ உதவிமேயர்

# கேள்வி--பதில்!

1. அமெரிக்காவில் மக்கள் தொகை மதிப்பீடு இனவாரியாகவா கணக்கிடப்படுகிறது?

இல்லை. இந்தியாவைப்போல மக்கள் தொகைக் கணக்கீடு ஜாதி, இனம் முதலியவற்றோடு மதிப்பிடப் படுவதில்லை யெனவும், எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர் என்ன ஜாதி? எந்த மதம் என்பனபோன்ற விசாரணைகளே கிடையாதெனவும், ஜாதி, இனம் பற்றிய மதிப்பீடு உத்தேச முறையில்தான் கணக்கிடப்படுவதாகவும் அமெரிக்க இதழ் ஒன்று அறிவிக்கிறது.

2. விஞ்ஞானப் புதுமை என்பதற்கு, சந்திர மண்டலத்தில் மனிதனை அனுப்புவதை உவமை காட்டமுடியுமா?

அதைவிடவும் புதுமையொன்று இருக்கிறதே! சில அமெரிக்க விஞ்ஞானிகள், காடுகளில் உள்ள மரம் செடி கொடிகளில் கிடைக்கும் இலை, தழைகளை, மனிதன் புசிக்கத்தக்க உணவாக்கிவிட முடியும் என்றும், பூர்வாங்கஆராய்ச்சி வெற்றி பெற்றுள்ளதாகவும், இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பின்னர், மனிதன் புசிக்கத்தக்க உணவாக, இலை, தழைகளை மாற்றிக்கொள்ளலாம் எனவும் கண்டுபிடித்துள்ளதாக ஒரு செய்தி வந்துள்ளது! இது உங்களுக்குப் புதுமையாகத் தெரியவில்லையா? இந்திய அரசுக்கு இதுபற்றிக் கவனப்படுத்திப் பாருங்களேன்!

3. அண்மையில் நடைபெற்ற அமெரிக்கத் தேர்தலில், எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி பெரும்பான்மையாக வெற்றி பெற்றுள்ளது எதைக் குறிக்கிறது?

ஜனாதிபதிக்கு அல்லாமல், செனட்டர்களுக்கு மட்டும் நடைபெறுகின்ற எந்தத் தேர்தலாயினும, எப்போதாயினும், ஆளுங்கட்சி பெரும்பான்மையும் தோற்பதுதான் வழக்கம் என்று தெரிகிறது. இதன்படி, தற்போதைய ஆளும் கட்சியான ஜனநாயகக் கட்சி மிகப்பல இடங்களில் தோற்றுப்போனாலும், போதிய பெரும்பான்மை இருப்பதாகவே கூறப்படுகிறது. ஆளும் கட்சியின் இத்தோல்வி, வியட்நாம் விவகாரத்தில், குடியரசுக் கட்சியின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லையென்றும், வியட்நாம் விவகாரத்தில், ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒத்த கருத்துடையவையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

4. வறுமை — அதனால் தற்கொலை! எந்த நாட்டில் என்று சொல்லுங்கள் பார்ப்போம்?

காங்கிரஸ் அரசின் ஆளும் திறமையை எடுத்துக்காட்ட நீங்கள் இப்படிப்பட்ட கேள்வியைத் தேர்ந்தெடுத்தது உங்கள் மனக்குமுறலைத்தான் காட்டுகிறது. தமிழ்நாட்டிலும் கூட குடும்பம் குடும்பமாகத் தற்கொலைச் செய்திகள் வெளிவரத் தொடங்கிவிட்டன என்பது உண்மைதான்! எடுத்துக்காட்டினால் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போருக்கு ஆத்திரம்வரும். என்றாலும் உம் துணிவு பாராட்டத் தக்கதுதான். இந்தத் துணிவை பிப்ரவரியில் காட்டுங்கள்! மற்றவர்க்கும் தேர்தலில் தங்கள் கடமையை நினைவூட்டுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

5. டெல்லியில் நடைபெறப் போகும் முதலமைச்சர்கள் மாநாட்டுப் போகும்போது சேலம் இருப்பாலை பற்றி வலியுறுத்துவேன் என்றாரே தமிழக முதலமைச்சர், என்ன ஆயிற்று?

நீர், திருப்பெரும்புதூர் தொகுதி வாக்காளர்தானே! முதலமைச்சர்தான் அங்கு அடிக்கடி முகாமிட்டுக்கொண்டிருக்கிறாரே, நேரடியாகப் போய்க் கேளுங்களேன்; நிச்சயம் பேட்டி கிடைக்கும்!

6. சொந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களையே அந்தந்த மாநிலத்துக்குக் கவர்னராக நியமிக்கவேண்டும் என்று கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி பி. ஜி. முகர்ஜி கூறியிருக்கிறாரே தெரியுமா?

இப்படிப் பத்தாண்டுக்கு முன்னமேயே கழகம் கூறி இருக்கிறது என்பது அந்த நீதிபதிக்குத் தெரியுமோ — தெரியாதோ?

7. ஊதாண்ட் பதவி விலகல் உறுதியாகிவிட்டதே?

உள்ளம் ஒரு மென்மையான கண்ணாடி. ஒருமுறை உடைந்து போனால், இயற்கையான முறையில் அதனை ஒட்டவைப்பது அவ்வளவு சாத்தியமானதல்ல. ஊதாண்டின் உள்ளம் வியட்நாம் விவகாரத்தில் சுக்குநூறாக உடைந்துபோய்விட்டது. சுமார் 5 லட்சம் ரூபாய்வரையில் ஆண்டு ஊதியம் உடைய அப்பதவியை அவர் உதறி எறிகிறார் என்றால், எந்த அளவுக்கு உடைக்கப்பட்டிருக்கும் அந்த உள்ளம் என்று எண்ணிப் பாருங்கள்! 'சூ'வைப் போன்ற எஃகு இதயங்களும் உண்டு; அவை விதிவிலக்குகள்!

8. நவம்பர் 7--ம் நாள், காமராஜர் தாக்கப்பட்டதில், காங்கிரசாருக்கும் பொறுப்பிருக்கிறது என்ற குற்றச்சாட்டு, வலுவடைந்து கொண்டே போவது எதைக் குறிக்கிறது?

அந்த வன்முறைச் செயல்கள் பற்றி சட்டரீதியான நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யாத வரையில், காங்கிரசார் இது பற்றி மறுத்துரைக்க உரிமை உடையவர் அல்லர்!

9. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீக்ரோவர் எவரும் அமெரிக்கச் செனட்டில் அங்கம் வகித்திருக்கிறார்களா?

வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரும் இதுவரையில மத்திய செனட்டில் அங்கம் வகித்ததில்லையெனவும் முதன முதலாக அண்மையில் நடைபெற்ற தேர்தலில், எட்வாடு புரூக் என்ற கருப்பர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாகவும் இவர் ஒரு அட்டர்னி ஜெனரல் என்றும் இதற்கு முன் மூன்று முறை குடியரசுக் கட்சி வேட்பாளராகத் தேர்தலில் நின்று தோற்றிருக்கிறார் எனவும் தெரிகிறது.

o

# காஞ்சி

மலர் 3 4-12-66 இதழ் 19


# வாழ்த்துகிறோம்!

**எத்தனை இன்னல்கள் நத்திடினும் எமை**
**ஏதும் செயவல்ல தொன்றுஉண்டு அது**
**கத்தி முனையினும் கூரிய வாளினும்**
**சுத்தம் படைத்திட்ட எங்கள் நெஞ்சம்**

என்று நெஞ்சத்தின் தூய தன்மைக்கும், அதன் கூர்மைக்கும், வன்மைக்கும் ஒப்புமைக் காட்டப்பட்டுள்ள ஒரு கவிதையின் பகுதி இது.

தமிழகமெங்கும் உள்ள சிற்றூர், பேரூர், பட்டி, தொட்டி முதலான அத்தனைப் பகுதியிலுமுள்ள கழகத் தோழர்கள்—கழகத்தின்பால் கொண்டுள்ள பற்று பாசத்தின் காரணமாகவும், காட்டாட்சி தர்பார் நடாத்திடும் கனவான்களது கண்மூடித்தனமான செயல்களால் விளைந்துவிட்ட கேடுபாடுகளினால், அல்லலுக்கு ஆட்பட்டுப்போன கொடுமையைக் கெல்லி யெறிய வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணமாகவும் குடும்பப் பாசத்தோடு—மேலே காட்டப்பட்ட கவிதையைப் போன்ற தூய—துல்லியமான நெஞ்சத்தோடும் கழகத்தின் கட்டளையை மேற்கொண்டு, கடமை உணர்வோடு காரியமாற்றிக் கொண்டு வருகிறார்கள்!

கத்தி முனைக்கும், கூரிய வாளுக்கும் நெஞ்சத்தின் தூய தன்மையை ஒப்புக் காட்டிய சிறப்பு பாராட்டத் தக்கது. அதனுள் ஒளிந்துகொண்டிருக்கும் உண்மையோ—அதனை வெளிப்படுத்திக் காட்டினால், அதனினும் பாராட்டத்தக்கதா யிருக்கும்!

தூய நெஞ்சத்தை ஐயுறுவோன் யார்? துல்லியமான இதயத்திற்குக் களங்கம் காண்போன் யார்? எங்கே யவன்? கத்தி வேண்டாம்! வாள் வேண்டாம்! அதனை யொத்த எங்கள் நெஞ்சமே போதும் அந்த நெறி கெட்டவர்களை நிர்மூலமாக்க! என்று பொங்கியெழும் உணர்வின் சொந்தக்காரர்கள் அந்தப் பாடலுக்குரியோர்; கழகத்தில் இருக்கும் காளையர் அத்தனைப் பேருமே அவர்கள்தான் என்று எண்ணிப் பார்க்கிறபோது—

காங்கிரசின் கொடுமைகளையும், வஞ்சக நெஞ்சத்தை வாயார வாழ்த்தி-வளர்த்து விபரீதங்களுக்கு வித்திடவும் செய்கின்ற அதன் இழிவான செயல்களையும் நினைந்து நினைந்து தொய்வுபட்டுப் போன உள்ளங்கள்கூட, ஆறுதலால், அகமகிழ்வால், அன்புப் பெருக்கால் நெஞ்சம் நிமிர்த்தி நின்று—ஊறிவிட்ட எச்சிலை உமிழ்ந்ததேபோல், ஏச்சுக்களையும், இழிவுடைப் பேச்சுக்களையும் 'தூ!' வெனத் துப்பிவிட்டு, நிரம்பிய நல்லுணர்வின் மக்களாய்—வீறுர்ந்த நடையினராய், செம்மாந்த இயல்பினராய், ஏறுர்ந்த காளையராய் கழகத்தார் இருக்கின்ற காட்சி கண்டு களிக்கின்ற நல்வாய்ப்புக்களையும்,

கழகத்தின் மாவட்ட மாநாடுகள் எனும் பேரால்; பெரும்பாலான மாவட்டங்களிலே நடைபெற்று முடிந்த மாநாடுகளையும், பந்தல் நிறைந்து வழிந்தது என்று, நம்பற்றி எழுதவே கூசிக் கிடந்த சில ஏடுகள்கூட தீட்டிக் காட்டும் அளவுக்குக் கூடி, பெருமைகள் பேசி, கடமைகள் உணர்த்தப்பட்டு கருத்துரைகள் நல்கப்பட்டதனையும்,

படைக்கப்பட்ட விருந்தினைப் பக்குவமாய் உண்டு சீராக ஜீரணித்து — உணர்த்தப்பட வேண்டியனவற்றை உணர்த்தப்பட வேண்டியவர்க்கு உணர்த்தும் முறையில் உணர்த்திக் கொண்டிருக்கும் ஒப்பற்றப் பணியிலே ஆங்காங்குள்ள தோழர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில்,

சோற்று மடையடைக்கும் சோணாடு என்ற பேர் பெற்ற வளநாட்டின் ஒரு பகுதியாம் தருமபுரி — சேலம் ஆகிய மாவட்டங்களின் மாநாடாக,

இத்திங்கள் 3, 4 ஆகிய நாட்களில், கிருஷ்ணகிரியில் நடைபெற்றதானது கழகத்தின் வெற்றிக்காக கண்ணயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் அப்பகுதித் தோழர்களுக்கு எவ்வளவு பெரிய விருந்து!

வெவ்வேறு பகுதியிலே, வெவ்வேறு காரணங்களுக்காகச் சந்தித்துக்கொண்ட கண்களும் கண்களும், மீண்டும் ஒருமுறை கிருஷ்ணகிரியிலும் சந்தித்துக் கொண்டுள்ளன.

தமிழகத்திலே அடுத்தடுத்து வீசிய கொடும் புயல்; பெரும் மழை இவற்றால் வீடிழந்து, வாழ்விழந்து வதைக்கு ஆளாகி, மக்கள் இதுவரையில் காணாப் பெருந்துயரில் மூழ்கி கவலைகள் கால்கோலி இருக்கும் நிலையில், அரசினரால் போதிய நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்படாமலும், தேவையான உதவிகளைச் சீராகச் செய்யாமலும் இருக்கின்ற கொடுமைகளைச் சுமந்தவர்களாய்க் கூடி இருக்கிறோம்!

இந்த மாநாட்டிற்குக் கோவை வட்டத்தின் கொள்கைவளர் சிங்கமாம் உடுமலை நாராயணன் தலைமையேற்று கருத்துரை யாற்றியுள்ளார்.

புயலின் கொடுமைக்குத் தன் பகுதியைப் பலி கொடுத்துப் பரிகாரம் தேடி அரசோடுப் போராடிக் கொண்டிருக்கும் திண்டிவனம் தங்கவேலு எம்.எல்.ஏ. திறந்துவைத்து கடமைகளை நினைவூட்டியிருக்கிறார்.

அமைதியே உருவான, காஞ்சி நகராட்சி உறுப்பினர் திருமதி சரசுவதி அம்மையார் கொடியேற்றி வைத்துள்ளார்.

மொத்தத்தில், பண்டைத் தமிழகத்தின் பான்மைச் சிறப்புக்குப் பகலோன்போல் பாராண்டுப் பல்கிய புகழின் சிறப்பு தேடி—இறவாமையுற்ற எத்தனை எத்தனையோ மாமன்னர்களது தலைநகராய் இருந்த தகடூர் எனும் புகழ் நகரைக் கொண்ட தருமை மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் குள்ளு பந்தலில், வடிவேலு அரங்கில் கூடி கடமையுணர்த்தப் பெற்றுள்ளார்கள் தோழர்கள்.

இதன் வெற்றிச்சிறப்பு, அடுத்து இத்திங்களிறுதியில் நடைபெறவிருக்கும் மாநிலப் பொது மாநாடு வரையில் ஒலித்துக் கொண்டிருக்குமாறு, பெற்ற விளக்கங்களை யெல்லாம், கழக வெற்றியின் குறிக்கோளை ஏந்தியபடிப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள தூய நெஞ்சங்களை உளமார வாழ்த்துகிறோம்.

O




## 2–27
## பாம்பு செய்த கேடு!

"இவ்வளவு நேரம் நீ சொல்லியதைக் கேட்டு, நான் செத்திருக்க வேண்டும்! ஆனால் ஏனோ எனக்குச் சாவு வரவில்லையே!" என்று குனிந்த தலையை நிமிர்த்தாமலே கனகசேனன் கூறினான்.

"முத்தங்கள் கொடுத்த பிறகு, அவர் என்னை என்ன செய்தார் தெரியுமா?" என்று திருமேனி புன்னகையோடு அவனைப் பார்த்தாள்.

"அவன் தலையில் இடி விழட்டும் —இனிமேல் அவன் பேச்சையே என்னிடம் எடுக்காதே! உன்மீது கூட எனக்குக் கோபம் உண்டாகிறது, திருமேனி!"

"என்மீது கோபமா? — ஏன்? நான் என்ன தவறு செய்தேன்! எவ்வளவோ நான் தடுத்துத்தான் பார்த்தேன்! அவர் பெரிய அவசரக்காரர் போலிருக்கிறது. விடுங்கள் விடுங்கள் என்று நான் எவ்வளவோ மன்றாடியும், என்னை வலிய இழுத்து......"

"வலிய இழுத்து—?"

"மார்போடு அணைத்துக்கொண்டார்! இறுக அணைத்துக் கொண்டார்!"

"உனக்கு ஆத்திரம் வரவில்லையா?"

"இல்லை. ஆனந்தமாக இருந்தது! அணைத்தவர் எங்கே விட்டுவிடுகிறாரோ என்று நானும் அவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன்!"

"அய்யோ! இதையெல்லாம் நான் கேட்கவேண்டியதாக இருக்கிறதே! என் தலையில் இடி விழுந்து, இதே இடத்தில் இப்படியே நான் இறந்து விட்டால்கூட எவ்வளவோ நன்றாக இருக்குமே!"

"இதென்ன, கொஞ்சநேரத்திற்கு முன்புதான் அவர் தலையில் இடி விழட்டும் என்றாய். இப்பொழுது உன் தலையிலேயே இடி விழ வேண்டுமென்று பிரார்த்திக்கிறாய் —இன்னும் சிறிதுநேரம் போனால், என் தலையிலும் இடிவிழ வேண்டும் என்று கூறுவாய் போலிருக்கிறதே!"

"உன் தலையில் மட்டுமா, ஒரு பெரிய இடியாக விழுந்து இந்த உலகமே அடியோடு அழிந்துவிட்டால் கூட நான் கவலைப்படமாட்டேன்— திருப்தியடைவேன்!"

"இந்த உலகம் அழிவதற்கு முன்பு, நடந்ததையெல்லாம் கூறிவிடுகிறேன்—கேட்டுக் கொள்ளுங்கள்! கடைசியில் அவர் என்னைத் தம்மிரு கரங்களால் தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தார்! எங்கே போகிறீர் என்று கேட்டேன் — புன்னகையோடு! மதுரைக்கு என்றார்—என் கன்னத்தில் தம் உதட்டை வைத்து! எனக்கு ஒரே ஆத்திரம் வந்துவிட்டது! ஒரே திமிறாகத் திமிறி, அவர் கையினின்றும் 'தொப்'பென்று தரையில் குதித்தேன்! மதுரைக்குப் போய் நாம் மணந்துகொண்டு, மகிழ்ச்சியோடு வாழலாம் வா என்று ஆசை வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பித்தார்! ஏதோ முத்தமிடுகிறார், அணைக்கிறார், போனால் போகட்டும் என்று சும்மா இருந்தால், கடைசியில் கல்யாணத்திற்கே அடிபோட ஆரம்பித்தால் நான் சும்மாவா இருப்பேன்? எப்படி இருக்க முடியும்—நான் என்ன ஏமாளியா?"

"அந்தச் சண்டாளன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை தரக்கூடாது?"

"ஒரு அறை கொடுக்கத்தான் கையை ஓங்கினேன் — அதற்குள் திடீரென்று விழித்துக் கொண்டேன்!"

"இவ்வளவு நேரம் நீ சொல்லியதெல்லாம் வெறும் கனவுதானா? உண்மைதான என்று என் உள்ளமே இடிந்து போய்விட்டது!" என்று கூறி அவன் பெருமூச்சு விட்டான்.

"கனவு இல்லாமல் உண்மை என்றுதான் நினைத்துக் கொண்டாயா? அவர் அருகில் வந்து உட்காரும் வரை, நான் சும்மா ஆருப்போனா—சும்மா இருந்தேனா என்று நினைக்க உனக்கு எவ்வளவு ஆணவம்?"

"அட, அட, இதென்ன திருமேனி, உன் கோபத்தை என்மீது திருப்பிவிட்டாய்?"

"என்னை மணந்துகொள்ளப் போகிறவன் நீதானே—உன்னிடம் கோபித்துக் கொள்ளாமல் வேறு யாரிடம் கோபித்துக் கொள்வேன்!"

"தேனாய் இனிக்கிறது திருமேனி உன் பேச்சு—ஆனால் அதில் கொஞ்சம் வேம்பும் கலந்திருக்கிறதே!"

"அப்படியென்றால்?"

"நீ நீ என்று மரியாதை இல்லாமல் பேசுகிறாயே—அதைச் சொல்கிறேன் திருமேனி! நீர் நீங்கள் என்று மரியாதையாக அழைத்தால் தான் என்னவென்று கேட்கிறேன்!"

"நீ என்பதைவிட நீர் என்ற வார்த்தை மரியாதை என்று கருதுகிறாயா? சுத்தத் தப்பு! இதற்காகத்தான் பெரியவர்கள் சொல்வது தொல்காப்பியம் படிக்கவேண்டும் என்று!"

"தொல்காப்பியந்தானே—அதை நான் படித்திருக்கிறேனே!"

"நீ படித்த அழகு இப்பொழுது தெரிகிறதே! எது மரியாதைச் சொல், எது தாழ்வுச் சொல் என்பது உனக்குத் தெரியவில்லையே! நீ தொல்காப்பியம் படித்தும் ஒன்றுதான், படிக்காததும் ஒன்றுதான்!"

"உன்னோடு எதற்குச் சண்டை! வார்த்தையில் இல்லாவிட்டாலும் உன் மனத்தில் மரியாதை இருந்தால், அதுவே போதும்! திருமணமான பிறகு, எல்லாம் சரியாகிவிடுகிறது!" என்று சொல்லிக்கொண்டே எழுந்து அவள் அருகில் சென்றான்.

(13-பக்கம் பார்க்க)

# தம்பி

## ★ முடியும்; முயன்றால்! ★

பஞ்சமும் பட்டினிச்சாவும், பற்றாக்குறையும் அகவிலையும், கிளர்ச்சியும் கலவரமும், அடக்குமுறையும் வன்முறைச் செயல்களும், மிரட்டிக்கொண்டிருக்கக் காண்கின்றோம். சமூகம் முழுவதிலும் ஓர் சலிப்புணர்ச்சி கப்பிக்கொண்டிருப்பது விளக்கமாகத் தெரிகிறது. இந்தக் கொடுமைகளுக்கெல்லாம், ஆளவந்தார்களின் திறமைக் குறைவும் ஆணவப் போக்குமே காரணம் என்று நடுநிலையாளர் பலர் கருத்தறிவித்துள்ளனர்.

மோசமடைந்துகொண்டு வரும் நிலைமையைக் கண்டு திகைத்துப்போன நிலையில் காங்கிரசின் பெருந்தலைவர்கள், நடைமுறைக்கு ஒத்துவரவே முடியாத யோசனைகளை வீசிக்கொண்டு, மசட்டல் மறந்து கிடந்திடக் காண்கின்றோம். எங்கே பார்ப்பினும் ஓர் ஏமாற்றம், எரிச்சல்! விடமாட்டேன் போ! என்ற வீராவேசம், வீழ்ந்துபடுவதாயினும் நான் எண்ணியதைச் சாதித்தே தீருவேன் என்ற சூளுரை! கடை அடைப்புகள்! ரயில் நிறுத்தங்கள்! தீயிடல்! இடித்திடல்! தகர்த்திடல்! இவைகளைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடுகள்! — எந்த ஒரு நாகரீக அரசும் சகித்துக்கொள்ள முடியாதன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொறுப்புள்ள எந்த அரசியல் கட்சியாயினும் இந்த நிலைமையை, வன்முறையை ஆதரிக்கலாமா? கண்டித்திட வேண்டாமா? என்று ஆளுங்கட்சி, பிற கட்சிகளைக் கேட்கிறது.

கிளர்ச்சிக்காரர்களோ, "இவ்வளவு மோசமான நிர்வாகத்தை, பொறுப்புள்ள எந்தக் கட்சியேனும் ஆதரிக்க முடியுமா? கண்டித்திட வேண்டாமா?" என்று கேட்கின்றனர்.

சட்டமும் சமாதானமும் நிலவிடவேண்டும்; ஒழுங்குமுறை காப்பாற்றப்பட வேண்டும், எக்காரணத்தைக்கொண்டும், எத்தகைச் சிக்கலுள்ள பிரச்சினையாக இருப்பினும், வன்முறை மூலம் தீர்வுகாணலாம் என்ற நினைப்பே எழலாகாது என்பதிலே தளராத நம்பிக்கைகொண்டுள்ள நம் போன்றவர்களின் நிலைமை, தம்பி! மிகவும் சங்கடத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

கட்டடங்கள் தகர்க்கப்படுவதையும், ரயில்கள் கவிழ்க்கப்படுவதையும் காணும்போது எப்படி நமது மனம் பதறுகிறதோ அதுபோலவே, மக்கள் விரட்டிவிரட்டி அடிக்கப்படுவதையும், சுட்டுக் கொல்லப்படுவதையும் காணும்போதும் மனம் பதறத்தான் செய்கிறது! இதிலே எதைத் தொடர்ந்து எது நடைபெறுகிறது, எதன் விளைவாக எது நடைபெறுகிறது என்று கண்டறியத்தான் முடிகிறதா! கண்டறிவதுதான் எளிதா! இல்லையே! கிளர்ச்சி நடத்துவோர் கூறுகின்றனர், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பது நமக்கு நாமே கேடு தேடிக்கொள்வது என்ற சாதாரண உண்மைகூடவா எமக்குத் தெரியாது — நாங்கள் என்ன அந்த அளவுக்குக்கூடவா அறிவுத் தெளிவு பெறாதவர்கள்! நாங்கள் மிக நியாயமான காரணத்துக்காக நடத்தும் கிளர்ச்சிகளை வேண்டுமென்றே ஒடுக்குவதற்காக, கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது இந்த அரசு! அந்தக் கொடுமையைக் காணும் மக்கள் எமது கட்டுதிட்டங்களையும் மீறி



# வாட்டம் போக்கிடும் வகையைக் காணோம்!

வன்முறையிலே ஈடுபடுகின்றனர்; நாங்கள் என்ன செய்ய? என்று செப்புகின்றனர்.

நியாயம் எங்கே என்று தேடிக் கண்டுபிடிப்பதற்குள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள் சாம்பலாகிவிடுகிறது; விலை மதிக்கொணாத உயிர் பல பறிக்கப்பட்டுப் போய்விடுகின்றன; நாட்டிலே மறைக்கப்பட முடியாத விதமான வடுக்கள் ஏற்பட்டு விடுகின்றன.

தம்பி! இவைபற்றி நான் இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தப் பிரச்சினையை அலசிப் பார்த்திடவேண்டும் என்பதற்காக அல்ல; இத்தகைய மோசமான, வேதனை தரத்தக்க சூழ்நிலையின் பின்னணியில், பொதுத்தேர்தல் நடத்தப்பட இருக்கிறதே அதனைக் கவனித்தனையா என்று உன்னைக் கேட்பதற்காகத்தான்.

சட்டம் சமாதானம், ஒழுங்கு இவைகள் செம்மையான முறையிலே காப்பாற்றப்பட முடியாத சூழ்நிலையில்,

உணவு நெருக்கடி பஞ்சம், பட்டினிச்சாவு என்ற அளவு முற்றிவிட்டிருக்கிற சூழ்நிலையில்,

சமூகத்தின் எந்த ஒரு மூலையிலும், மனநிறைவு இல்லாமல், பிரச்சினைகள் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், பொதுத் தேர்தல் நடத்தப்பட இருக்கிறது.

புண்ணுக்கு மருந்திட்டு புன்னகையை வரவழைத்து, மக்களை ஓரளவு மனநிறைவு கொண்டிடச் செய்து பிறகே, பொதுத்தேர்தலில் தமக்கு ஆதரவு அளித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்றுதான் எந்த ஆளுங்கட்சியும் எண்ணம்கொண்டிடும். ஆனால் காங்கிரஸ் கட்சியோ, மூட்டிவிட்ட தீ அடங்கா முன்பு, மூண்டுவிட்ட வேதனை விரிவாகியுள்ள வேளையில, ஆத்திரம் பொங்கிடும் நிலையிலே உள்ள மக்களிடம் ஆதரவு பெற்று பொதுத் தேர்தலிலே வெற்றியைப் பெற்றிட முடியும் என்று நம்புகிறது!

பஞ்சமும் பட்டினியும் கொட்டும் நிலையில், பட்டினிச் சாவு கண்களை உறுத்தும் நிலையில், அகவிலை தாக்கிடும் நிலையில் எப்படி மக்களை அணுகுவது என்ற அச்சமோ, இந்த நிலையில் உள்ள மக்களிடம் ஆதரவு திரட்டிட முடியுமா என்பதிலே அய்யப்பாடோ, துளியும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு இருப்பதாகத் தெரியக்காணோம். இதனை என்னென்பது! துணிச்சல் என்பதா? அல்லது மக்கள் வேதனையிலே தத்தளிக்கும் வேளைதான் அவர்களின் ஓட்டுகளைப் பறித்திடுவதற்கு ஏற்ற வேளை என்ற திட்டம் என்பதா? புரியவில்லை.

பஞ்சத்தைப் போக்க, பற்றுக்குறையை நீக்க, உணவு நெருக்கடியை நீக்க, அகவிலையைக் குறைக்க, எடுத்துகொள்ளப்படவேண்டிய முயற்சிகளிலே காட்டவேண்டிய தீவிரமோ அக்கறையோ தென்படுவதைக்காட்டிலும், தேர்தல்பற்றிய தீவிரமும் அக்கறையுமே அதிகமாகக் காங்கிரஸ் வட்டாரத்திலே தெரிந்திடுவது காண்கிறோம்.

ஆகவே, காங்கிரஸ்கட்சி துணிச்சல் பெற்றிருப்பது மட்டுமல்லாமல், மக்களின் வாழ்வுபற்றிய அக்கறையுமற்று இருப்பது நன்றாகத் தெரிகிறது.

இந்தப்போக்கு இவ்வளவு வெளிப்படையாகத் தெரியும்போது, எதைக்கொண்டு அல்லது எதைக்காட்டி, மக்களுடைய ஆதரவைப் பெறமுடியும் என்று காங்கிரஸ் கட்சி நம்பிக்கொண்டிருக்கிறது என்பது, உள்ளபடியே புதிராகத்தான் இருக்கிறது.

மக்களைக் கண்டால், வெட்கித் தலைகுனியவேண்டிய பல செயல்கள், காங்கிரஸ் கட்சியுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றன. பாராளுமன்றத்திலே எழுப்பப்படும் புகார்கள், பத்திரிகைகளிலே விவாதிக்கப்படும் பிரச்சினைகள் ஆகியவற்றைக் கவனிக்கும்போது, காங்கிரஸ்கட்சி மக்களைச் சந்தித்து தனக்கு ஆதரவு அளிக்கும்படி எந்த முகத்தைவைத்துக் கொண்டு கேட்கமுடியும் என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுகிறது. ஆனால், பார்க்கின்றாயே தம்பி! புதிய புதிய படகு மோட்டார்கள் பறக்கின்றன! புதுப்புது கதர்ச் சட்டைகள் தைக்கப்படுகின்றன! அவர் காங்கிரசில் சேர்ந்தார்! இவரை இழுத்துக்கொண்டார்கள்! —என்ற பேச்சு பலமாக அடிபடுகிறது. தேர்தல் வேலையிலே காங்கிரஸ்கட்சி மும்முரமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுவிட்டிருக்கிறது.

போதுமான அளவு உணவு கிடைக்கவில்லையே! பசியும் பட்டினியும் கொட்டுகிறதே என்று பதறுகிறார்கள், மக்கள்; அவர்களைப் பார்த்துக் காங்கிரஸ் தலைவர்கள், "சரி! சரி! இதுவரையில் திங்கட்கிழமை மட்டும் சாப்பிடாமல் இருந்துவந்தீர்கள் அல்லவா? இனி வியாழக்கிழமைகளிலும் சாப்பிடாதீர்கள்! — என்று யோசனை கூறுவதோடு தமது பொறுப்பு முடிந்துவிட்டதாகக் கருதிக்கொள்கிறார்கள்.

வாரத்துக்கு இரண்டு நாட்கள், கட்டாயப் பட்டினி கிடக்கவேண்டிய நிலைமைக்கு நாட்டு நிர்வாகத்தை மோசமாக்கிவிட்டதற்காக வெட்கப்படாமல், வருத்தப்படாமல், அதே காங்கிரஸ் கட்சி, எந்த மக்களைப் பட்டினிபோடுகிறதோ அதே மக்களிடம் 'ஓட்டு' போடும்படியும் வற்புறுத்துகிறது; போடுவார்கள் என்றும் நம்பிக் கொண்டிருக்கிறது.

தம்பி! படக்காட்சிகளிலே பார்த்திருக்கலாம் பாதகன் ஒருவன், ஒரு நல்ல குடும்பத்தை நாசமாக்கி, அக்குடும்பத்துப் பாவையைச் சிறைப்பிடித்து, அம் மங்கையை அழுத கண்களுடன் இருந்திடும்போது, சவுக்காலடித்து "ஆடு! ஆடடி அணங்கே! ஆடு! ஐயாவின் மனம் மகிழும்படி ஆடு!" என்று கட்டளையிடுவதுபோன்ற சம்பவத்தை. அதுபோல, மக்களைப் பட்டினிக் கொடுமைக்கு ஆளாக்கிவிட்டு, அதிகாரத்தைக்காட்டி, அதே மக்களை, "போடு ஓட்டு!" என்று மிரட்டிப் பறித்திடவும் காங்கிரஸ் திட்டமிடுகிறது.

# விலைபேசும் வித்தையை விரவுவார் தம்பி!

எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான அளவு உணவு நெருக்கடி முற்றிவிட்டிருக்கிறது.

நாலுநாட்கள் தொடர்ந்து மழை பெய்கிறது என்றால், உணவு அமைச்சர் சுப்பிரமணியம் துள்ளிக் குதிக்கிறார் மகிழ்ச்சியால், "பெய்துவிட்டது பெருமழை! பொய்த்துவிட்டது எதிர்க்கட்சியின் ஆருடம்! விளைச்சல் அமோகமாக இருக்கப்போகிறது! உணவு நெருக்கடி இனி இராது!" என்றெல்லாம் சிந்துபாடுகிறார். ஆனால், மழை பெருமழையாவதும், வெள்ளமாகிவிடுவதும். விளைந்ததை அழிப்பதும் நடைபெற்றுவிடுவது காண்கின்றோம். மகிழ்ச்சி மடிந்துபடுகிறது; திகைப்பு மேலிடுகிறது: பயிர்மட்டுமல்ல! அமைச்சர் தயாரித்த புள்ளிவிவரங்கள் தீய்ந்துபோய்விடுகின்றன. உணவு நெருக்கடி பயங்கரமான வடிவம் எடுக்கிறது.

தேவைப்படும் அளவுக்கு உணவுப் பொருள் கொடுத்துக்கொண்டு வருவோம் என்று அமெரிக்கா கூறிவிட்டது; ஆகவே, உணவு நெருக்கடிபற்றிய பயம் வேண்டாம், போதுமான உணவுப் பொருள் கப்பல் கப்பலாக வந்துகொண்டிருக்கும் என்று அமைச்சர் பெருமிதத்துடன் பேசிவந்தார்.

இப்போது அமைச்சரின் குரலிலே வருத்தம் தோய்ந்திருக்கக் காண்கின்றோம்.

ஆகஸ்ட்டுமாதமே கேட்டோம், உடனடியாக உணவுப் பொருள் அனுப்பிக் கொடுக்கும்படி, வரக்காணோம் என்று வருத்தம் தெரிவிக்கிறார்.

அமெரிக்காவின் போக்கிலேயே ஒரு திடீர் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள் அனுப்பிக்கொடுக்கும் திட்டம் முடக்கப்பட்டு விட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கான காரணம் என்ன என்று ஆராய்ந்துகொண்டிருப்பதன் மூலம், அருவருப்பு தரத்தக்க சில அரசியல் பிரச்சினைகளைக் கிளறிக்கொள்ள முடியும்! வேறு உருப்படியான பலன் ஏற்பட வழி இல்லை, ஆகவே, அமெரிக்காவின் போக்கிலே ஒரு மாறுதல் ஏற்படக் காரணம் என்ன என்று ஆராய்வதைக் காட்டிலும், ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத்தீர்க்க வேறு எங்கிருந்து உணவுப் பொருள் தருவிக்கலாம், எந்த முறையில் என்பதுபற்றிய ஏற்பாட்டினைக் கவனிப்பதே முக்கியமானதாகும்.

ஆனால் காங்கிரசின் பெரிய தலைவர்கள் இதிலே கவனம் செலுத்துவதைவிட, யாரைப் பிடித்திழுத்து எந்தத் தொகுதியிலே நிற்க வைக்கலாம் என்பதிலேதான் மிகுந்த அக்கறை காட்டிக் கொண்டுள்ளனர்!

தம்பி! காங்கிரசின் பெரிய தலைவர்கள், தமது கட்சியிலே கொள்கைத் தூய்மை மாய்ந்து போய்விட்டதனாலேயும், தமது ஆட்சியினாலே மனம் குமுறிப் போயுள்ள நிலைக்கு மக்கள் சென்றுவிட்டதனாலேயும், இனி அந்த மக்களுடைய அன்பான ஆதரவைப் பெற முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். ஆதரவை இனிப் பெற்றுக்கொள்ள, அச்சமூட்டும் முறையையே மேற்கொள்வது என்று திட்டமிட்டு விட்டனர். அதற்காக, எவராக இருப்பினும், அவருடைய முன்தொடர்புகள் யாதாக இருப்பினும் கவலையில்லை அவர் பெரிய புள்ளியா, ஆள் கட்டு உள்ளவரா, ஜாதி உணர்ச்சியைத் தூண்டி பலம் பெறத்தக்கவரா, பணத்தாலே மக்களை விலைக்கு வாங்கக் கூடியவரா என்ற இவைகளை மட்டுமே கணக்கில் கொண்டு, புதியவர்களைப் பிடித்திழுத்துக் காங்கிரசுக்குப் பலம் சேர்க்கின்றனர்.

தம்பி! இரண்டொரு திங்களுக்கு முன்பு ஒரு நகரத்தில், நமது கழகக் கூட்டம்; நான் பேசினேன்; அன்று அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர், நமது கழகத்தவர் ஆண்டு பலவாக; எனக்கு நண்பர்; காங்கிரசு தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதிலே ஆர்வம் கொண்டவர்.

அவர், அன்றைய கூட்டத்திலே காட்டிய ஆர்வம், அனைவரும் பாராட்டத்தக்கதாக இருந்தது.

நாலைந்து நாட்களுக்குள், திடீரென அவரை, அந்தப் பக்கத்துக் காங்கிரஸ் தலைவர்கள் மொய்த்துக்கொண்டு, அவரை நம்மிடமிருந்து பிரித்து, காங்கிரசில் சேர்த்து, அவரையே அந்தத்தொகுதியில், நமது கழகத்தை எதிர்த்து நிற்க—காங்கிரஸ் வேட்பாளராக நிற்க — ஏற்பாடு செய்துவிட்டனர் என்று அறிகிறேன்.

இஃது, மனித இயல்பு எந்தெந்த வகையாக வெல்லாம் மாறக்கூடியது, கெடக்கூடியது என்பதை மட்டுமல்லாமல், ஓட்டு வேட்டையிலே மட்டும் குறியாக உள்ள காங்கிரஸ் கட்சி எத்தனைவிதமான தரக் குறைவான செயலுக்குத்தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் என்பதையும் நாம் உணரும்படிச் செய்கிறது.

இந்தப் புதிய வலிவினைத்தான் அவர்கள் பெரிதும் இன்று நம்பிக்கொண்டுள்ளனர்; கொள்கை வலிவையும் அல்ல; சாதனைகளையும் அல்ல.

அவர்கள் மற்றும் ஓர் விஷயத்தில் மிக அதிகமான அளவு நம்பிக்கை கொண்டுள்ளனர். மும்முனைப் போட்டியைத் தவிர்க்க வேண்டும், காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளுக்குள் ஒரு தோழமைத் தொடர்பும், தொகுதி உடன்பாடும் ஏற்படவேண்டும், காங்கிரசல்லாத ஓட்டுகள் சிதறிவிடும்படி விட்டுவிடக் கூடாது என்பதனை நமது கழகம் வலியுறுத்திக்கொண்டு வருகிறது.

கூட்டு என்றும் எதிர்ப்புஅணி என்றும் உடன்பாடு என்றும் பல்வேறு விதமாகப் பெயரிட்டு அழைக்கப்படும் இந்த ஏற்பாட்டுக்கு, நமது கழகம் முதலிடம் கொடுத்திருக்கிறது.

# தட்டிக் கொடுத்தும் தடவித் தந்தும்...

இதற்கான பேச்சு வார்த்தைகள் வளர வளர, கனிவுக்குப் பதிலாகக் கசப்பு வளரும், தோழமைக்குப் பதிலாக பகைமை எழும், என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

> கூடுமானவரையில், இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றி தராத நிலையை உண்டாக்க வேண்டுமென்பதற்காகக் காங்கிரசுக் கட்சி தன்னாலான முறைகளைக் கையாண்டு வருகிறது.

தோழமைத் தொடர்பு கொண்டு. தொகுதி உடன்பாடு செய்துகொள்வதற்காக, பல கட்சிகள் கலந்து பேசும் போது, ஏமாற்றம், எரிச்சல் எழக்கூடும். இதனை எவரும் எதிர்பார்க்கத்தான் செய்வார்கள். ஆனால், கடுமையான விவாதம் நடத்திப் பார்த்து, இறுதியாக தோழமையான ஒரு முடிவுக்கு வரமுடியும் என்று கழகம் நம்புகிறது.

> காங்கிரஸ் தலைவர்கள்—பெருந் தலைவர்கள்—பேச்சு வார்த்தை வெற்றி பெறாது—மனக் கசப்பிலேதான் அது கொண்டு செல்லும் என்று கருதுகிறார்கள்.

அதற்காக, தட்டிக் கொடுத்தல், தடவிக் கொடுத்தல், தூதுவிடுதல் தூபமிடுதல் ஆகிய முறைகளை இப்போதே அவர்கள் நடத்திக்கொண்டு வருகின்றனர்.

> ஆயிரம் தடவை கூடிப் பேசினாலும் அண்ணாதுரை அசைந்து கொடுக்கமாட்டான்—என்று பிற கட்சிகளிடமும் உங்கள் அண்ணாத்துரை அசடன்—பிற கட்சிகளின் பச்சைச் சிரிப்பிலே மயங்கிப் போய், பல இடங்களை விட்டுக் கொடுத்துவிடுவான்—என்று கழகத் தோழர்களிடமும், காங்கிரசின் தலைவர்கள்—மாவட்ட அளவிலே உள்ளவர்கள்—இப்போதே பேசிக்கொண்டுள்ளனர். அறிந்திருக்கிறேன்.

நமது கழகத்திலே, தம்பி! வெள்ளை உள்ளம் கொண்டவர்கள், கள்ளங் கபடமற்றவர்கள், ஏராளம். அவர்களைத் தூண்டிவிடுவது எளிதான காரியம் என்று, அந்தக் கலையிலே வல்லவர்களான காங்கிரசார் எண்ணிக்கொண்டுள்ளனர். நமது கழகத் தோழர்களுக்கு 'ரோஷம்' எழச் செய்து விடுவதன் மூலமே, நமக்கும் சுதந்திரக் கட்சிக்கும் உள்ள தோழமைத் தொடர்பைக் கெடுத்துவிட முடியும் என்று கடைசி வரிசைக்காரர் அல்ல, முதல் வரிசைக்காரரான காமராஜரே நம்பித்தானே பேசிவந்திருக்கிறார்; "கழகத் தொண்டர்களே! எப்படி ராஜகோபாலாச்சாரியாருடன் நேசமாக இருக்க முடிகிறது? உங்களை அவர் குரங்கு என்று ஏசுகிறாரே!!" என்று பேசினார். தாம் பெற்றுள்ள உயர்வான இடத்துக்கும் இவ்வளவு மட்டமான சிண்டு முடியும் பேச்சுக்கும் துளிக்கூடப் பொருத்தம் இல்லையே என்று யோசித்தாரா? இல்லை! ஏன்? இந்தப் பேச்சைக் கேட்டு, முன்னேற்றக் கழகத்திலே ஒரு பத்துப் பேர் 'ரோஷம்' கொண்டு, சுதந்திரக் கட்சியுடன் 'கூட்டு' கூடவே கூடாது என்று பேசமாட்டார்களா, எதிர்ப்புக் கிளப்பமாட்டார்களா! என்ற ஆசை. அப்படி எவரேனும் ஒருவர் எதிர்ப்புக்கிளப்பினால், ஒரு எட்டு நாளைக்கு அவர் 'கொட்டை எழுத்து' விளம்பரம் பெறுவார்!! அதற்கு ஆசைப்பட்டுக் கொண்டு சிலர் கழக அணியிலிருந்து பிளந்துகொண்டு வெளிவருவார்கள் என்றெல்லாம் எண்ணம், அவருக்கு—காமராஜருக்கு!!

எங்களை ஆச்சாரியார் சொன்னது போலத்தானே ஐயா! உம்மைப் பற்றி, காங்கிரஸ் வட்டாரத்திலும், குறிப்பாக இதழ்களிலும் கூறுகின்றனர் என்பதை நான் கூறி சான்றுக்காக, ஆனந்தவிகடனில், காமராஜரை, அனுமார் போலவே படம் போட்டு வெளியிட்டிருந்ததை எடுத்துக் காட்டினேன். காமராஜர் வாய் மூடிக்கொண்டார்! ஆனால் மறுபடியும் சில திங்களுக்குப் பிறகு மறுபடியும் அதே பேச்சு! அதே மூட்டையைச் சொரிந்துவிடுகிற வேலை!!

இப்போது 'சிண்டு முடிந்திடும்' கட்டம் முடிந்துவிட்டது; பங்குச் சண்டை கிளப்பிடும் கட்டம் வந்துவிட்டிருக்கிறது. ஆகவே இப்போது காமராஜரும் அவரால் பயிற்சி அளிக்கப்பட்டவர்களும், கழகத்துடன் தோழமைத் தொடர்பு கொள்ள முனையும் கட்சியினரைக் கண்டு, கனிவான ஓர் பார்வையை வரவழைத்துக் கொண்டு,

> இவ்வளவு நேசம் காட்டுகிறீர்களே, உங்களுக்கு இல்லையா?
>
> இவ்வளவு பாசம் காட்டுகிறீர்களே பதினைந்தே இடம்தானா உங்களுக்கு?
>
> உங்களுடைய உதவியில்லாமல் கழகம், எண்ணி எட்டு இடத்திலே கூட வெற்றி பெற முடியுமா?
>
> ஏமாந்துவிடாதீர்கள்—உங்கள் இடங்களை விட்டுக்கொடுத்து விடாதீர்கள்?

என்ற இந்தவிதமான பேச்சினை அவிழ்த்துவிடுகிறார்கள். அதைக் கேட்டு, அந்தக்கட்சிகள், இடம் கேட்பதிலே பிடிவாதம் காட்டவேண்டும், அதன் காரணமாகத் தொடர்பு முறியவேண்டும், தோழமை கெடவேண்டும் என்பது அவர்களின் நோக்கம். இத்தகைய கலகப் பேச்சுக்கு, கட்டுப்பாட்டுடன் வளர்ந்து, அரசியல் நோக்குடன் நடத்தப்பட்டு வரும் கட்சிகள் பலியாகிவிடமாட்டா! ஆனால் வெறும் தேர்தல் வேலைக்காக மட்டும் வடிவம் கொள்ளும் கட்சிகளும், விலைவு காட்டும் தலைவர்களும், சுலபத்திலே பலியாகிவிடுவார்கள்.

> ஆகவே, ஒவ்வொரு கட்சியும் தத்தமக்கு என்று இடம் கேட்டு, விவாதம் நடத்தும்

---


தி. மு. கழக தேர்தல் பிரசார நாடகம்

குறைந்த செலவில் நடத்திக்கொள்ள விரும்புவோர், தொடர்புகொள்ளவும்.

R. S. R. கலைக்குழு,

மே/ பா. ப. தங்கையன், தி.மு.க. செயலாளர்,

குத்தாலம் P.O. (தஞ்சை மாவட்டம்)

# மும்முனைப் போட்டியை முடுக்கிடாதீர்!

போது, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் நோக்குடனேயே இந்தத் தோழமைத் தொடர்பு உருவாக்கப்படுகிறது என்ற பொது உண்மையை மறவாமல் இருந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கே உரித்தானது என்று நாம் எண்ணிக் கொண்டுள்ள இடம் சில நமக்குக் கிடைக்காது போய்விடினும், அந்த இழப்பின் மூலம், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் காரியத்துக்கு வலிவு கிடைக்கும் என்றால், தனிப்பட்ட இழப்புகளுக்கும் நாம் நமது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதிலும் தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் கொள்ள விரும்பும் கட்சிகள் ஒன்று இரண்டு அல்ல, பல.

துவக்க முதல் தோழமைத் தொடர்பு கொண்டிடும் நோக்குடன் கழகத்துடன் நேசமாக உள்ள கட்சிகள், முஸ்லீம் லீகும், சுதந்திரக் கட்சியுமாகும்.

அடுத்த கட்டத்தில், இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியும் நம்முடன் தோழமைத் தொடர்பு கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தது.

அச்சம் கூச்சம், தயக்கம் தடுமாற்றம் ஆகியவைகளைக் கடந்து மெள்ள மெள்ள நம்மை நோக்கி தோழமைத் தொடர்புக்காக வருவதற்கு, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சிக்கும் நாட்கள் அதிகம் பிடித்தன. வந்துகொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் நினைப்பும் தொகுதிப் பங்கீட்டு உணர்வும் இல்லாத சூழ்நிலையிலேயே எனக்கும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களுக்கும் நட்பு நெருக்கமானது.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் ம. பொ. சி. அவர்களும், தொகுதி உடன்பாடு நோக்குடன் கழகத்துடன் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

சோஷியலிஸ்டு கட்சியும் பிரஜா—சோஷயலிஸ்டு கட்சியும், தொகுதிகள் குறித்துக் கழகத்துடன் பேச விருப்பம் தெரிவித்து நான் குறிப்பிடும்படி எழுதி இருக்கிறார்கள்.

தம்பி! தொகுதி உடன்பாட்டுக்காகவும் தோழமைத் தொடர்புக்காகவும் கழகத்துடன் பேச்சு வார்த்தை நடத்த இதுபோல கட்சிகள் பலவும், வேறு தனிப்பட்ட நண்பர்களும் விருப்பம் தெரிவிக்கும் போது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது என்றாலும்,

இத்தனைக்கட்சிகளுக்கு இடையில், இன்னின்ன கட்சிகளுக்கு என்று எப்படித் தீர்மானிப்பது என்பதை எண்ணும்போது திகைப்பு மேலிடத்தான் செய்கிறது.

காங்கிரசின் பெரிய தலைவர், இந்த நிலைமையில் எப்படியும் சிக்கல் எழத்தான் செய்யும், அதன் காரணமாக முறிவு ஏற்படும். அதன் விளைவாக மாச்சரியம் எழும் என்று எதிர்பார்க்கிறார்; விரும்புகிறார்.

மும்முனைப் போட்டியைத் தவிர்க்க விரும்புகிறேன் என்பதனாலேயே, நாங்கள் கூறும் நிபந்தனைக்கு உட்படாவிட்டால், நாங்கள் மும்முனைப் போட்டியை மூட்டிவிடுவோம் என்று எவரும் மிரட்டிப் பணியச் செய்ய முயற்சிக்கக் கூடாது என்பதனை பணிவுடன், அதே போது உறுதியாக நான் முன்பே தெரிவித்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக என்று நான் எந்தத் தொகுதியைக் கேட்பதாயினும், அந்தத் தொகுதியில,

கழகத்திற்கு ஏற்பட்டுள்ள தொடர்பு,
செல்வாக்கின் அளவு, வகை,

சென்ற தேர்தலின்போது ஏற்பட்ட நிலைமை,

இடையிலே ஏற்பட்டுள்ள கழகப் பிரசார வளர்ச்சி,

கழகம் குறிப்பிடும் வேட்பாளரின் தகுதி திறமை வசதி வாய்ப்பு

ஆகியவைப் பற்றிய விளக்கம் அளித்துத்தான் விருப்பத்தைத் தெரிவிப்பதாக முறை வகுத்துக் கொண்டிருக்கிறேன், மற்றவர்களும் அது போன்ற ஒப்புக் கொள்ளத்தக்க ஒரு முறையை மேற்கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

இந்த நோக்கத்தைப் புரிந்துகொண்டு பேச்சு நடத்தினால் சிக்கல் குறைந்து, உடன்பாடு ஏற்பட வழி எளிதாகக் கிடைத்திடும்!

சிக்கல் குறையாது. உடன்பாடு ஏற்படாது என்று காங்கிரஸ் பெருந்தலைவர்கள் கருதுகிறார்கள்; ஆகவே குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

கழகத்துக்கும் தோழமைக் கட்சிகளுக்கும் இடையிலே எழக்கூடிய கருத்து வேற்றுமை பற்றி மட்டுமல்ல. கழகத்துக்கு உள்ளேயே, ஒரே தொகுதியில், இரண்டு மூன்று வேட்பாளர்கள் கிளம்புவர், பிடிவாதம் வளரும், எந்தவிதமாகத் தீர்வு காண்பது என்பது குறித்து தலைமை திணறும், பிளவு வெடித்திடும், பேதம் உருவாகும், அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், காங்கிரசின் பெரிய தலைவர்கள் எண்ணிக்கொண்டுள்ளனர்.

ஒரே தொகுதிக்காக இரண்டு மூன்று வேட்பாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்; இது சிக்கலுள்ள பிரச்சினையாகக்கூடும் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

முகப்பில்:

மாநகராட்சி மன்ற மேயர் சம்பந்தமும்,
துணை மேயர் கிருஷ்ணமூர்த்தியும்.

# இயல்பை மீறிய எதுவுமே இல்லையே!

இந்த சிக்கலிலே, இறுதியான முடிவினை நானே தெரிவிக்க வேண்டுமெனக் கூறிடும் போது, மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுங் கூட இருக்கிறது. என்றாலும், பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், நிலைமையையும் காங்கிரஸ் கட்சியின் நினைப்பையும் நன்கு எண்ணிப் பார்த்து, என்னுடைய 'முடிவு' வரட்டும் என்று, என் மீதே முழுப் பளுவையும் போட்டுவிடாமல், வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பினை உணர்ந்து, தாமாகவே ஒரு சமரசம் கண்டு, ஒருமித்த முடிவு காண வேண்டும் என்று பணிவன்புடன் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மிக அருமையாக அமைத்துள்ள ஒரு அணியினை, நமக்கென்று ஏற்பட்டுவிட்டுள்ள விருப்பத்தை மட்டுமே பெரிதாகக் கருதி, உடைபடும்படி விட்டுவிடக் கூடாது என்பதனை நினைவுபடுத்துகிறேன்.

அவ்விதம் நமது அணி உடைபட வேண்டும் என்பதே காங்கிரசின் விருப்பம் என்பதையும் நாம் உணரவேண்டும்.

**ஆகவே நமது நோக்கம், நமது விருப்பம் நிறைவேறுகிறதா இல்லையா என்பதைக் காட்டிலும், நமக்காக உருவாகியுள்ள அணி; எந்தக் காரணத்தாலும் உடைபடாமல் இருக்கிறதா என்பதிலேதான் இருந்திட வேண்டும்.**

இந்த நேர்த்தியான நிலையை நாம் காண்பதற்காக நம்மிலே ஒவ்வொருவரும் தனது நலம், தனது வலிவு, தனது நோக்கம் என்பவைகளைப் பின்னணிக்குத் தள்ளிவைத்து. கழகத்தின் பொதுநலனை முன்னணியில் கொலுவிருக்கச் செய்திட வேண்டும்.

நமது கழகத் தோழர்களிலே மிகப் பெரும்பாலானவர்கள், அதிலும் வேட்பாளர்களாகத் தம்மை அறிவித்திருப்பவர்கள், இளமைப் பருவத்தினர்; எளிதிலே கோபதாபத்துக்குத் தம்மை ஒப்படைத்துவிடக்கூடிய நிலையினர். ஆகவே அவர்கள் தமது பருவத்திற்கு ஏற்பட்டுள்ள இயல்பினையும் மீறிய, பொறுமை உணர்ச்சியையும், பொறுப்பு உணர்ச்சியையும் காட்டித் தீரவேண்டும்.

மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன், ஆங்காங்கே தோன்றிடும் சிக்கல்களை அந்த அந்த இடத்திலேயே நீக்கிக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

எல்லாவற்றையும் மொத்தமாக்கி, உருட்டித் திரட்டி ஓர் பேருருவாக்கி, என் முன் கொண்டுவந்து நிறுத்திவிடாதீர்கள்.

**எனக்குள்ள பொறுத்துக் கொள்ளும் உணர்ச்சி வலிவுள்ளது என்றாலும், சிக்கல்களை அறுத்து, எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க தீர்வு அளிப்பதற்கான ஆற்றல் பெரிய அளவில் என்னிடம் இல்லை.**

**எனக்கென்று சொந்தத்தில் விருப்பு வெறுப்பு அதிக அளவிலே இல்லை என்றாலும், உடன் இருப்போரின் விருப்பு வெறுப்புகளை ஒரே அடியாகத் தள்ளிவிட்டு 'முடிவு' காணும் 'கண்டிப்பு' என்னிடம் போதுமான அளவு இருக்கிறதா என்பதிலே எனக்கே நிரம்ப ஐயப்பாடு உண்டு.**

ஆகவே, சிக்கல் எழும் ஒவ்வொரு கட்டத்திலும், அந்தந்த வரிசையில் உள்ள பொறுப்புள்ள கழகத் தோழர்கள், அந்த

(12-ம் பக்கம் பார்க்க)

## கரம் மாற்றவேண்டும்!

எத்தனையோ நாட்கடந்த இடைவெளிக்குப் பின்னர்
எழுதற்கு ஏடெடுத்தேன்! என்னையெழு தென்று
கத்துகடல் முத்துக்கள் கடந்தகதை சொல்லும்;
கருவானம் தன்னையென காட்சிபல காட்டும்;

வெம்புயலால் தீமழையால் வீழ்ந்திட்ட தென்னை,
வேரிற்று சாய்ந்தபுளி மாமரங்கள் கூடி
அம்புவிகாக் கும்எங்கள் அளப்பரிய சேவை
அழிந்தகதை காணென்று அழுதபடி கூறும்!

நீர்தந்து நீளுலகை நித்தநிதம் காக்கும்
நீர்நிலைகள் நிலைகெட்ட நிலையெண்ணி யாங்கே
பாரிபுரக்கும் தம்பணிக்குப் பழுதுற்ற காட்சி
பார்!என்னை! பாவிநான்! பாடென்று பேசும்!

பாவியர்கள் பல்லாண்டு பாராண்ட தாலே
பாழ்பட்ட தெம்வாழ்வு! பயன்கெட்டோ மென்றே
மேவுசிறு கூரைகுடில் மேலாடை இல்லா
மேன்மைதனைக் கூறென்று மெள்ளெனவே சொல்லும்!

ஆடுசில மாடுசில கன்றுசில வந்தே
அழிந்திட்ட தெம்குடும்பம்! அதனைப்பா டென்னும்!
ஓடாகத் தேய்ந்தாலும் உழைப்பைநிதம் யாத்து
உப்பரிகை வாழ்வோர்க்கே உவகையொடு நல்கும்

ஏழைசிலர், எம்மைப்பார்! இற்றதுஎம் வாழ்வு!
இறவாமல் எதனாலோ இதுநாட்கள் மட்டும்
கோழையென மோழையென குவலயத்தே வாழ்ந்
தோம்!

கோடிற்று ஆட்சி! அதால் குலைந்திட்டோம் நாங்கள்!

கும்பிக்கோ வழியில்லை; அரைஆடை இல்லை;
திண்டாட்டம் நாள்தோறும்! அன்றாடம் சாவு;
நம்பிக்கை இனியில்லை! நாம்வாழ மாட்டோம்!!
நம்பியே! எழுதெம்மை! என்றார்கள், தோழா!

யார்பற்றி எவைபற்றி யாப்பேனுன் பாடல்?
யாரிங்கே எவையிங்கே 'வாழ்க்கை'யெனக் கண்டார்!
பார்தோழா! பட்டாங்கு படும்பாட்டை! நானே
பாராளும் கோல்பற்றும் கரம்மாற்ற வேண்டும்!!

—சீயேயெம்.

# "மணிலா மடமை"

வால்ட்டர் லிப்மன் அரசியல் உலகம் அறிந்த எழுத்தாளர்களில் ஒருவர் என்பது மட்டுமல்ல; அரசியல உலகத்தையே உருவாக்குபவர்களில் ஒருவர். அமெரிக்காவில் உட்கார்ந்துகொண்டு அவர் எழுதும் அரசியல் கருத்துக்கள் உலகம் முழுமையுமுள்ள இதழ்களினால் பதிப்புரிமை பெற்று வெளியிடப்படுகின்றன; ஆண்டுக்கு ஒருமுறையாவது நாடுகளைச் சுற்றி வருவார்; அவரை அழைத்து பேசுவதையும் கருத்து அறிவதையும் ஒரு அரசியல் கடமைகளில் ஒன்ருகக்கூட அமெரிக்கத் தலைவர்கள் கருதுவதுண்டு.

இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் உரிய அவர் அண்மையில் அமெரிக்க அதிபர் ஜான்சன் தனது தோழமை நாடுகளுடன் சேர்ந்து மனிலாவில் நடத்திய பேச்சு வார்த்தைகளை "மனிலா மடமை" (Manila Madness) என்று கடந்த கிழமை எழுதியிருப்பது பார்வையாளர்களின் கவனத்தைக் கவர்வதாக இருக்கிறது.

ஜான்சன் முக்கிய பங்கேற்ற மனிலா மாநாடு 'வியட்நாம்' போர் பற்றியது. ஏறக்குறைய பத்து நாடகளுக்குமேல் அமெரிக்க அதிபர் நடத்திய தென்கிழக்கு ஆசிய பயணம் என்ற அடிப்படையில் உலக முக்கியத்துவம் பெற்ற அந்த நிகழ்ச்சியை 'மடமை' என அமெரிக்க அரசியல் எழுத்தாளரே குறிப்பிட்டிருப்பது பொருத்தமோ பொருளோ இல்லாமல் இல்லை.

உள்நாட்டைப் பொறுத்தவரையில்கூட 'வியட்நாம்' அமெரிக்காவின் தலையாய பிரச்சனையாக இருக்கிறது. வெள்ளை மாளிகைககு அடுத்து வருவது யார் — டாலர் மதிப்புக் குறைவதேன்—இந்தியாவுக்கு உணவுக் கட்டுப்பாடு எதற்காக—இப்படி ஒன்றுக்கு ஒன்று தொடர்பே இல்லாத பல விவகாரங்கள்கூட 'வியட்நாம்' என்ற பிரச்சனையினால் ஒரே ஒரு வகையில் தொடர்பைப் பெற்றிருக்கும்.

அமெரிக்காவில் 'வியட்நாம்' பற்றி இரண்டு தீவிர கருத்து முகாம்கள் இருந்து வருகின்றன.

"வியட்நாமை விட்டு வாஷிங்டன் பின்வாங்கவே கூடாது. வேண்டுமானால் இன்னும் கோடிக்கணக்கான டாலர்களையும் ஆயிரக்கணக்கானவர்களையும் செலவழிக்கட்டும். ஆசிய மண்ணில் அமெரிக்காவின் கௌரவம் நிலைப்பது வியட்நாமைப் பொறுத்ததுதான்."

இப்படிப்பட்ட ஒரு கருத்து ஒரு புறமும்,

"வியட்நாம் ஒரு வேண்டாத தலைவலி. அதைவிட்டு அப்பால் வந்தால்தான் அமெரிக்கா மற்ற துறைகளில் பிரச்சனைகளில் கவனம் செலுத்த முடியும்."

என்ற கருத்து ஒருபுறமும் கட்சி—கொள்கை—தனி நபர் வேறுபாடு அறிய பல எல்லைகளைக் கடந்து அங்கே பேசப்பட்டு வருகிறது.

இதில் முதலில் கூறப்பட்ட தரப்பினருக்குத் தலைமை தாங்குகிருர் வால்ட்டர் லிப்மன் பத்திரிகை உலகத்தைப் பொறுத்த மட்டில்.

கூட்டுச் சேராத எந்த ஆசிய நாடும் வியட்நாம் பிரச்சனையில் உங்களை ஆதரிக்கவில்லை. ஐரோப்

## உலக அரங்கில்

பாவின் எந்த தனித்த நாடும் வாஷிங்டனை இவ்வவகாரத்தில் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. பின்னர் எந்த அடிப்படையில் இன்னும் அங்கே இருந்துகொண்டிருக்கிறீர்கள்?

என்று கேட்கிருர் லிப்மன். அவர் கூற்று அனைத்தும் ஏற்கக்கூடியதே. இந்தியா—ஜப்பான்—பாகிஸ்தான்—பர்மா—மலேசியா—இந்தோனேஷியா எந்த நாடும் அமெரிக்காவுக்கு முழு ஆதரவு அளித்திருப்பதாகத் தெரியவில்லை.

பிரான்சின் டிகாலே வெறுப்பை வளர்த்துக்கொண்டதே இப்பிரச்சனையில்தான். இங்கிலாந்தும் ஏறத் தாழ அதே நிலை.

ஆசியாவில் சாம்ராஜ்யங்கள் மறைந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன. நாடுகள் பலவும் விடுதலையடைந்துள்ளன. ஆனால் அமெரிக்காவோ இன்னும் ஆசியா 1940லேயே இருப்பதாக நினைக்கிறது என நிலையை உணர்த்தியுள்ளார் லிப்மன்.

**காலமாற்றம் — கருத்து ஆதரவு;** முன்னதைப் புரிந்துகொள்ளாத போக்கு, பின்னது இல்லாதநிலை. இந்த இரண்டு பின்னணியில் அமெரிக்கா, வியட்நாமில் போர்ச் சூழல்களை வளர்த்துக்கொண்டுபோவது சொந்த நாட்டுக்காரர்களது கவனத்தையே உருத்தியுள்ளதைத்தான் லிப்மனின் கருத்து காட்டுகிறது.

மனிலா மாநாட்டை ஒரே சொல்லால் 'மடமை' என விளித்துவிடும் அளவுக்குப் பொறுமை இல்லாதவரல்ல லிப்மன். ஆனால் அவருக்கே விளக்குவதற்கு அச்சொல்தான் கிடைத்திருக்கிறது என்பது வியட்நாம் அமைதியின்மையில் அமெரிக்காவின் 'பங்கு' எவ்வளவு என்பதைத்தான் படம் பிடித்துக் காட்டுகிறது.

## ஆசிய அபிவிருத்தி பங்கு

பின்னடைந்த மற்றும் முன்னேறும் நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுக்குத் துணைபுரியும் ஒரு அமைப்பாக ஆசிய அபிவிருத்தி பாங்க் கடந்த கிழமை டோக்கியோவில் துவக்கப்படடிருக்கிறது.

ஆசியாவின் தனித்த சேவைகளை உணர்த்தும் வகையில் ஜப்பான்—இந்தியா போன்ற நாடுகளின் முக்கியத்துவம் அதிகரிக்கப்படவேண்டும் என்ற ஒரு கோரிக்கை வலுப்பெற்று வரும்போது இந்த இரு நாடுகளுமே புதிய அமைப்பில பெரும பொறுபபேற்க இருக்கின்


### விற்பனையாளர் தேவை

'காஞ்சி' இதழை கீழ்க்கண்ட ஊர்களில் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை.

பவானிசாகர்
வந்தவாசி
ராணிப்பேட்டை
காரைக்குடி
ஒண்டிப்புதூர்
திருமங்கலம்

விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்.
'காஞ்சி'
சின்னகாஞ்சிபுரம்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கல்களை நீக்குவதற்கான காரியத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றிட வேண்டும்.

**எல்லாம் என்னிடம் விட்டுவிடலாம்—என்ற பேச்சிலே எனக்கு இனிப்பும் கிடைப்பதில்லை, அதனை நான் விரும்புவதுமில்லை; எல்லாவற்றையும் ஏற்ற முறையில் தீர்த்துவைத்திடும் ஆற்றல் என்னிடம் நிரம்ப இருக்கிறது என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை.**

ஆகவே, விரைவிலே, ஒரே தொகுதியில் விருப்பம் தெரிவித்துள்ள வேட்பாளர்கள், பொது நன்மையைக் கருதி, ஒரு சமரசம் கண்டறிந்து தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தம்பி! இப்போது நாம் மிகவும் முக்கியமான கட்டத்தில் அடி எடுத்துவைக்கின்றோம்.

நமக்குள்ளாகவே உள்ள போட்டிகளைத் தவிர்த்துக்கொள்வதும்,

நமக்கும், தோழமைக் கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்டாகவேண்டிய உடன்பாடுபற்றிய ஏற்பாட்டினைச் செம்மைப்படுத்துவதும்.

இந்த இரு செயல்களிலும், நமது கழகத் தோழர்கள் வேறு எதிலும் மேற்கொள்ளாத அளவு பொறுப்புணர்ச்சியினை மேற்கொண்டாகவேண்டும்.

வெண்ணெய் திரண்டுவரும்போது எத்தனைப் பக்குவம் தேவையோ, அத்தனை நேர்த்தியான பக்குவம் தேவை.

மற்ற கட்டங்களிலே எப்படி நான் விரும்பிய விதத்திலும், மகிழத்தக்க வகையிலும், தம்பி! நீ உன் திறமையைக் காட்டினாயோ அதேபோல இந்தக் கட்டத்திலும், உன் திறமையினைக் காட்டிடுவாய், வெற்றியினைப் பெற்றளித்திடுவாய் என்பதிலே நான் உறுதிமிக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

...ணபலம், பிரசாரபலம், பதவிபலம் மிக்க எதேச்சாதிகார வெறிபிடித்த கட்சியின் பிடியினின்றும் இந்நாட்டு மக்களை விடுவிக்கும் மகத்தான தொண்டிலே, உன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளாய். அதிலே குறிப்பிடத்தக்க அளவு சிறப்புள்ள வெற்றியும் ஈட்டியுள்ளாய்.

உன் சீரிய தொண்டு காரணமாகவே, நாட்டிலே இன்று காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை நல்ல அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது.

உன் வல்லமையிலே நம்பிக்கை மிகுதியும் இருப்பதாலேயே, பல கட்சிகள் இன்று நமது கழகத்துடன் 'தோழமை' கொண்டிட ஆவலைத் தெரிவித்துள்ளன.

உன் ஆற்றலின் துணைகொண்டு ஆணவ அரசை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை மிகுதியினாலேயே, நமது தோழர்கள், 'நான்—நீ' என்று ஒரே தொகுதிக்கே பலர் போட்டியிட்டுக் கொண்டு, வேட்பாளர்களாக வந்துள்ளனர்.

உன்னால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிலைமை, மகிழ்ச்சி தருவது போலவே, இந்த நிலைமையுடன் சேர்ந்து சில சிக்கல்களும் தோன்றியுள்ளன. அவைகளை நீக்கும் பொறுப்பும் உன்னுடையதே! அதற்கான ஆற்றலும் உன்னிடமே உளது!

**ரோஜா மலர்ந்திருக்கிறது; முள்ளும் உடன் இருக்கிறது!** முள்ளை நீக்கி மலரினைப்பறித்தெடுத்திட வேண்டும். தோட்டம் கண்டு, பாத்திகட்டி, பயிரிட்டு, மொட்டு மலராகும் வரையில் பாதுகாத்திட்ட உன்னால், முள்ளை நீக்கி மலரினைப் பறித்திடவா முடியாது! முடியும், முயன்றால்!!

அண்ணன்,

அண்ணாதுரை

---

...றன என்ற செய்தி வரவேற்கத் தக்கதாயிருக்கிறது.

இப்போதைக்கு 18-நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த பாங்குக்கு உலக பாங்க் போன்ற நிறுவனங்களும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளும் முதலீட்டு உதவி அளித்துள்ளன.

ரூபாய் 825-கோடியளவில் நிதியளிக்கப்பட்டிருக்கும் இந்த பாங்கில் அமெரிக்காமட்டும் 100-மில்லியன் டாலர்களுக்கு உதவியளித்திருக்கிறது.

ஏற்கனவே இதே அடிப்படையில் பெரிய அளவில் இயங்கிவரும் உலக பாங்க் என்னும் நிறுவனமே அரசியல் கண்களால பார்க்கப்பட்டு அவ்வப்போது குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகி வருகிறது.

இந்த நிலையில் அளவில் சிறிய ஆசிய அபிவிருத்தி பாங்கில் அதுபோன்ற குற்றச்சாட்டுகள் மிக எளிதாக தோன்றக்கூடும். குறிப்பாக இப்போதே மேற்கு நாடுகளின் செல்வாக்கு இந்த அமைப்புக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. உதவிக்கொள்கையிலும் ஆசியநாடுகளில் உள்ள மேற்கு நாடுகளைச் சேர்ந்த முதலாளித்துவ நிறுவனங்களுக்கே இந்தப் பாங்கு உதவ முன்வரக்கூடும் என்று கூடப் பேசப்படுகிறது.

இந்த இரண்டு நிலைகளும் ஆரம்ப கட்டத்திலேயே தடுக்கப்பட வேண்டும்.

அமெரிக்காபோல் இந்த நிலைமை. சோவியத்யூனியனிடமிருந்தும் முதலீட்டு உதவியினைக் கேட்டாவது பெறவேண்டும். அப்போதுதான் குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டு **"அரசியல் சமநிலை"** பெற முடியும்.

ஆசிய நாடுகளிலுள்ள வெளிநாட்டு நிறுவனமாக உதவுவதை விட உள்நாடுகளிலேயே உள்ள தனியார் அல்லது பொதுவார் துறைகளுக்கு உதவுவதுதான் பின்தங்கிய நாடுகளுக்கு உண்மையான முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்பதையும் இந்தப் புதிய அமைப்பு கருத்தில் கொள்ள வேண்டும்.

பொருளாதாரத் துறைக்கென்றே முழுதும் அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற இந்த அமைப்பில் அரசியல் குற்றச்சாட்டுகள் எழாமல் இருப்பதுதான் முதல் தேவையாகும்.

—எஸ். ஆர்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

"என்ன அகில் வருகிருய்! அய்யோ, இதென்ன புன்னகை— 'லகரமாக'' என்று வாய்ப்பாடு கூறிப் பின்புறமாகத் தள்ளி நின்ருள்.

'உன் கணவனுக்கு இந்த உரிமை கூடக் கிடையாதா?'

குறுநகையோடு அந்த அரசிளங் குமரியின் பொற்கரத்தைப் பற்றி ஞன்.

அவள் கையை உதறிக்கொண்டு 'சீ! உனக்குப் புத்தியில்லை — இதென்ன வேலை?' என்று சினத் தோடு கேட்டாள்!

'உரிமைப் பெண்ணுயிற்றே என்று கையைத் தொட்டால், இப் படித்தான் பாம்புபோலச் சீறி விழுவதா?'

'பாம்புபோலச் சீறிவிழுவதோடு விட்டேனை — பிடித்த கையில் விஷப்பல்லை அழுத்தியிருந்தால், இந்நேரம் மரணபுரியில் அல்லவா உனக்கு வரவேற்பு நடந்திருக்கும்' என்று கீழே கிடந்த மக்கிளையை எடுத்து, அவனை அடிக்கப் போனுள்!

'வேண்டாம்! வேண்டாம்! திரு மேனி.'

'இனிமேல் இப்படியெல்லாம் துடுக்குத்தனமாக எதையும் செய்ய மாட்டாயே?'

'செய்யமாட்டேன்?'

'செய்தால் நான் பாம்பாகிவிடு வேன்!' என்று பாம்பைப்போலக் கையைக் காட்டி 'உஸ்' என்ருள்!

விளையாட்டிற்காகத்தான் திரு மேனி பாம்புபோலக் காட்டி கனக சேனனைப் பயமுறுத்தினுள்! ஆனல் உண்மையான நல்லபாம் பொன்று, குலசேகரனைப் பய முறுத்திவிட்டது!

திருமேனியை விட்டுவிட்டு, செடி கொடிகளுக்கு மத்தியில் மறைந்து சென்ற குலசேகரன், குன்றின் அடிவாரத்தை அடைந்தபோது, அப்பக்கமாகப் பத்துப் பதினைந்து போர்வீரர்கள் வருவதைக் கண்ட தும். அங்கே இருந்த ஒரு புதருக் குள் ஒளிந்து உட்கார்ந்துகொண் டான்.

அந்தப் புதரின் முன்பு போர் வீரர்கள் வந்து நின்று, 'இவ்வளவு விரைவில் எப்படி மாயமாய்ப் போய்விட்டிருப்பான்?' என்று பேசிக்கொண்டது, அவனுக்கு நன் ருகக் கேட்டது!

அவர்கள் தூரமாகச் சென்ற பிறகுதான், அப்புதரை விட்டு வெளியே வரவேண்டும் என்ற முடி வோடு, வசதியாக ஒரு கல்லின்மீது சாய்ந்து உட்கார்ந்தான்.

திருமேனியிடம் சிக்கிக்கொண்டு கனகசேனன் தத்தளிப்பான் என்று நினைத்ததும் அவன் தனக் குத்தானே சிரித்துக்கொண்டான்.

போர்வீரர்களின் பேச்சுக் குரல் கேட்கவே, அவர்கள் என்ன பேசு கிருர்கள் என்பதை அறிய, காதை அப்பக்கம் திருப்பினுன்.

'இளவரசி, இராமதூதன்தானே நீ என்று கேட்டதும், நம் இளவர சரின் முகம் எப்படி இருந்தது பார்த்தாயா?'

'பார்த்தேண்டா, பார்த்தேன்! அசல் அதுபோலவே இருந்தது!'

'இராமதூதரே, உன்னோடு விளையாட நானும் உன்னைப்போல என்ன கிளைத்தாவியோ என்று இளவரசி கேட்டதும்......'

'நம் இளவரசர் எங்கே மரத்தின் மீது எறிவிடுகிருரோ என்று பயந்தேபோனேன்டா நான்.'

'இளவரசிக்குக் கொஞ்சம்....'

'கொஞ்சம் என்னடா, முழுப் பைத்தியந்தான்.'

'அந்தப் பைத்தியத்தைக் கட்டிக் கொள்ள, நம் இளவரசர் எதற் காக இப்படி உயிரைவிடவேண்டும்'

'இருவரும் பைத்தியம்!'

'டேய் மெதுவாய்ப் பேசடா, யார் காதிலாவது விழுந்துவிட்டால் பிறகு நம் தலை தரையில்தான் உருளும்.'

'அதுசரி, குலசேகரனுக்கும் திரு மேனிக்கும் எப்பொழுதிலிருந்து பழக்கம்?'

'இதென்னடா அர்த்தமில்லாத கேள்வி! அவர்கள் எப்பொழுது சந்தித்து ஒருவர் மனதை ஒருவ ரிடம் பறிகொடுத்தார்களோ? யாருக்குத் தெரியும்? செய்தி இப் பொழுதுதானே அம்பலத்திற்கு வந்திருக்கிறது.'

'இளவரசிக்குப் பைத்தியமா யிற்றே காதல் மட்டும் எப்படி யடா செய்யத் தெரிந்தது?'

'காதல் பைத்தியமடா அது! காலாகாலத்தில் கல்யாணம் செய்

16-ம் பக்கத் தொடர்ச்சி

மொத்தத்தில், பாகிஸ்தான் பற் றிய சர்ச்சையில், பிரிட்டன்பெற்ற புதிய தெளிவு, இந்தியாவின்மீது பாகிஸ்தான் வீண்பழிகள் சுமத்திக் கொண்டிருக்கிறது என்பதாகத் தான் இருக்கமுடியும் — இருக்க வேண்டும்.

இந்தியா — சீனுவுக்கு எதிராக பாகிஸ்தான், சீனுவுக்கு முழு ஆத ரவு கொடுப்பதுடன், சீன இப்போ திருப்பதையும்விட, இன்னமும் பெரிய வல்லரசாக ஆகவேண் டும் என்பதை பாகிஸ்தானும் விரும்புகிறது என்பதனை பிரிட் டன் புரிந்துகொண்டிருக்கும் — புரிந்துகொள்ள வேணடும்.

இதன் மூலம் பாகிஸ்தான், இந்தி யாவை மிரட்டி, காஷ்மீர் விவகா ரத்தில் பணியவைக்கவிரும்புகிறது என்பது வெளிப்படையான உண்மை என்பதனை பிரிட்டன் அறிந்திருக்க வேண்டும்—அல்லது அறிந்துகொள்ள வேண்டும்.

அனைத்து ஆசிய நாடுகளிலும், பாகிஸ்தான் இந்தியாவுக்கெதிராக எந்த அளவுக்கு எதிர்ப்புப் பிரசா ரத்திலீடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்தியாவும் புரிந்து கொண்டு, தக்க ஏற்பாடுகளால், அத்தகைய பொய்ப் பிரசாரத்தை முறியடிக்க வேண்டிய அவசியத் தையும், அயூபின் இலண்டன் பய ணம் இந்தியாவுக்கு அதிகமாக ஏற் படுத்திவிட்டிருக்கிறது என்பதை இந்தியா புரிந்துகொண்டால் நல்லது!

அதோடு, கிழக்குப் பாகிஸ்தான், அயூபின் கரம்விட்டு நழுவிவிடும் நிலைமை வளர்ந்தபடியேதான்— வலுத்தபடியேதான் இருக்கிறது என்பதனையும் இப்பயணம் தெளிவு படுத்திக் காட்டுகிறது என்பதை யும், புட்டோவின் தலைமையில் புதியதொரு எதிர்க்கட்சி உருவாகிக் கொண்டிருக்கிறது; அதற்கு மாண வர்களின் பேராதரவு அமிதமாக இருக்கிறதென்பதையும், அந்தப் புலிக்குகையில் எரிமலை குமுறத் தொடங்கி இருக்கிறதென்பதற் கான சில எடுத்துக்காட்டுக்களாக வெளியுறவுத்துறை அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பெற்றும், இன்னொரு அமைச்சர் இலாகா மாற்றத்திற்கு ஆட்பட்டும் இருக் கிருர் என்று காணப்படுகின்றன வென்பதையும் உலகமும் புரிந்து கொள்ளவேண்டும்.

—திருவாரூர் முத்துராமன்.

யாததினால், உண்டான கோளாறு! டே, அதெல்லாம் நமக்கு எதற்கடா? நம் வேலை என்ன? குலசேகரன் எங்கிருக்கிறான் என்று கண்டுபிடிக்க வேண்டியதுதானே! சரி, புறப்படுங்கடா, போய் அந்தப் பக்கமாகப் பார்க்கலாம்!'

'டேய், உனக்கென்னடா, காட்டு எருமையைப்போல இருக்கிறாய்— கஎளிலும் முள்ளிலும் புரளச் சொன்னால்கூட. நூறுகல் புரண்டு கொண்டு போவாய்? எங்களுக்கெல்லாம் கால் வலிக்கிறது. இங்கே கொஞ்சநேரம் , உட்கார்ந்திருந்து விட்டுத்தான் வருவோம்! ஆமாம்!'

பக்கத்தில் ஏதோ சலசலவென்று கேட்கவே, குலசேகரன் திரும்பிப் பார்த்தான். ஒன்றும் கண்ணில் படாததினால். திரும்பவும் அவர்கள் பேச்சில் கவனத்தைச் செலுத்தினான்.

சிறிது நேரத்தில் திரும்பவும் சலசலவென்ற சப்தம் மிகவும் அருகில் கேட்கவே, நிமிர்ந்து உட்கார்ந்து, என்னவென்று பார்த்தான்.

பாம்பு, நல்லபாம்பு ஒன்று அவன்காலின் அருகே வந்துகொண்டிருந்தது!

'ஆ!' என்று உரத்த குரலில் அலறிக்கொண்டே எழுந்தான்.

பாம்பு அவனைப் பார்த்துப் படமெடுத்தாடியது! அதைப் பார்த்ததும், அவன் நெஞ்சு துடிதுடித்தது! என்ன செய்வதென்று புரியாமல் திகைத்த நேரத்தில், போர்வீரர்கள் அவன் இருக்கும் இடத்தை நோக்கி ஓடிவருவது தெரிந்தது!

'இனி எப்படித் தப்புவேன்?' என்று மனம் பதைபதைக்கச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

'இதோ குலசேகரன் பிடியுங்கள்!' என்று போர் வீரர்கள் கத்தியதைக் கேட்டதும், நல்லபாம்பு மெல்லச் சருகுகளுக்குள் புகுந்து எப்படியோ நழுவிவிட்டது!

'இனி ஓட நினைப்பது வீண் வேலை!' என்ற முடிவோடு குலசேகரன் மௌனமாக நின்றுவிட்டான்.

போர் வீரர்கள் அவனைப்பிடித்து புதருக்கு வெளியே இழுத்து வந்தார்கள்.

'டேய் ஓடிப்போய் இளவரசரிடம் செய்தியைச் சொல்லடா!' என்று ஒருவன் சொல்ல, மற்றொருவன் குன்றின்மீது தாவி ஓடினான்.

குலசேகரன் கண்களை மூடிக்கொண்டான். பாண்டிய நாட்டின் சிம்மாசனம் தலைகீழாகக் கவிழ்வதைப்போலவும். தூமகேது வானத்தைப் பார்த்து இடி இடியெனச் சிரிப்பதுபோலவும், அவனுக்குத் தோன்றின.

''எச்சரிக்கையோடு நான் இருப்பேன் படைத் தலைவரே!'

"இன்னும் ஒன்று! பராக்கிரம பாகுவோடு அவன் மகள் திருமேனியும் வந்திருப்பதாகத் தெரிகிறது!"

"ஆமாம், திருமேனியும் சேர நாட்டிற்குத்தான் வந்திருக்கிறார்களாம்!"

"அவளுக்கு ஏதோ பைத்தியம் என்றும்..."

"சொல்கிறார்கள்! அது உண்மையா இல்லையா என்பதையும் தெரிந்துகொள்ள மாட்டேனா— அங்கு சென்றதும்!"

"அவள் அழகியாம்!'

"தாங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது, படைத்தலைவரே!" தாங்களோ வாலிபர்—செல்வதோ முக்கியமான வேவுபார்க்கும் வேலை! அங்கு அவளைச் சந்திக்க நேர்ந்து, அந்தச் சந்திப்பால் தங்கள் வேலையை மறந்துவிட்டு, ஆபத்தில் சிக்கிக்கொள்ளக்கூடாதே என்ற அச்சம்தான் எனக்கு!"

"காஞ்சனாவிற்குப் பிறகு, நான் வேறொருத்தியின் மீது காதல் கொள்வேனா?"

படைத் தலைவன் பாண்டிராசனுக்கும் தனக்கும் முன்பு மதுரையில் நடைபெற்ற இந்த உரையாடல், குலசேகரனின் நினைவிற்கு வந்தது.

"காஞ்சனாவிற்குப் பிறகு நான் வேறொருத்தியின்மீது காதல்கொள்வேனா? என்ற வார்த்தைகள் அம்புகளாக அவன் இதயத்தில் பாய்ந்தன.

"கண்ணே. காஞ்சனா!" என்று மனத்திற்குள்ளாகவே சொல்லிக் கண்ணீர்விட்டான்.

கோட்டையின்மீது தன் அருகே நின்றிருந்த பராக்கிரம பாண்டியன், ஓங்கிய வாளைக்கண்டு அஞ்சாமல் புன்னகை செய்த காஞ்சனா, குலசேகரனின் மனக்கண்முன் தோன்றிச் சிரித்தாள்!


## வாய்வு சூரணம்
**(Stomach Powder)**

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு—பித்த வாய்வு—இடுப்புவாய்வு—இடுப்பு, கைகால் பிடிப்பு மூட்டுகள் வலி —அசரிக்கை—செரியாமை—வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை.)

**160 கிராம் டின் ரூ 3—50**

**கக்குவான் மருந்து**
(WHOOPING - COUGH)

குழந்தைகளுக்கு வரும் தொற்று நோய், முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளையும் சளி கோழையையும், வெளிப்படுத்தி நோயை கட்டுப்படுத்தி விரைவில் குணப்படுத்தவல்லது.

**புட்டி ரூ. 2—00**

தேவைக்கு எழுதவும்:

**S. V. R. சன்ஸ் R. I. M. P.**
வாய்வு சூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு
அரிசிப்பாளையம், சேலம்-9.

நேரில்பெற கிடைக்குமிடங்கள்:

**தேஜ்பால் & கோ.,**
91, நைனியப்பநாய்க்கன் தெருவு,
சென்னை-3.

**இளங்கோ கிளீனிக்**
நெல்லித்தோப்பு,
வில்லியனூர் ரோடு, பாண்டிச்சேரி-5.

**சொக்கலிங்கம் செட்டியார்,**
நாட்டு மருந்துக்கடை
திருப்பாபுலியூர், கடலூர் N. T.

**ராஜா மெடிகல் ஹால்**
31, தர்மராஜா கோவில் தெரு,
பெங்களூர்.1 (கண்ட்)

**E. வல்லாராம்நாடார் & சன்ஸ்**
188-A, தாராவி ரோடு,
பம்பாய்-17.


### விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் நவம்பர் மாதபில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவறாமல்அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறோம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
'காஞ்சி'

"வேண்டாம்! என்னைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக, எதையும் நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டாம்! நான் சாகிறேன்! இந்த வஞ்சகனின் கோட்டைச் சுவர்கள், இதோ சரிந்து விழுந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்! பார்த்துப் பார்த்துப் பூரிக்கிறேன்! அந்தப் பூரிப்போடே சாகிறேன்! மேற்குத் திசையில் பகலவன் விழுவதற்கு முன்னரே, இந்த மோசக்காரனின் உடல் தரையில் பிணமாக விழப்போவதை எண்ணிக் களிக்கிறேன்! அந்தக் களிப்போடே, நான் சாகிறேன்! எனக்காக நீங்கள் கண்ணீர் விடாதீர்—கவலை அடையாதீர்—கயவர் கூட்டத்தின் மீது பாயுங்கள், கொல்லுங்கள்! வீரத்தாயின் மகனாகப் பிறந்தவன் என்று என் செல்வன் விக்கிரமன் பெருமைப்படுவதற்காக—தரணியிலே அவன் தலைநிமிர்ந்து நடப்பதற்காக—நான் சாகத் துணிந்துவிட்டேன்! சஞ்சலப்படாதீர்! சமரை நிறுத்தாதீர்!" என்ற காஞ்சனாவின் வீரமொழி காதில் ஒலித்து, அகக்கண்முன் மகன் விக்கிரமனைக் கொண்டுவந்து நிறுத்தியது.

"விக்கிரமா! விக்கிரமா!" என்று வேதனையோடு முணுமுணுத்தபடி கண்ணைத் திறப்பதற்கும்—அவன் நிலையைக் கண்டு 'அய்யோ!' என்று திருமேனி வாயில் விரல் வைத்து, வையமே இடுகிடுக்கும்படி அலறுவதற்கும் சரியாக இருந்தது! (வளரும்)





# தெரிவது இதுதான்

பிரித்தாளும் சூழ்ச்சியில் பேர் பெற்ற வெள்ளை இனத்தவரின் நாடு சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறார் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான்.

இலண்டனில் பத்து நாட்கள் தங்கி இருந்து, பிரதமர் வில்சனுக்கு மட்டுமல்லாமல், உயர்மட்ட வெள்ளை அதிகாரிகள் பலருக்கும், இங்கிலாந்து நாட்டு மக்களுக்கும் தன்னை யார்? என்று தெளிவுபடுத்திவிட்டுத் தன்பயணத்தை முடித்துக்கொண்டிருக்கிறார் அயூப்.

அதிபர் அயூப் இலண்டனைச் சென்று சேரு முன்னரே, அவரது வருகை குறித்துப் பிரமாதமான விளம்பரங்களும், ஹேஷ்யங்களும் வெளியிடப் பெற்றிருந்தன.

பாகிஸ்தானின் உள்நாட்டு நிலையைப் படம் பிடித்தும், ராணுவ மட்டத்தின் மனக் கசப்பையும், குமுறலையும் வெளிக் காட்டியும், அயூபின் ஆட்சி கவிழும் என்ற யூகங்களைக்கூட இலண்டன் இதழ்கள் கிளப்பி இருந்தன.

யானையின் வருகைக்கு முன்னேயே, ஒலித்த மணியோசை கிளப்பிவிட்ட பற்பல சர்ச்சைகளுக்குப் பதிலளித்துத் தீரவேண்டிய 'இடுக்கி' நிலையை இலண்டன் இதழ்கள் எதற்காக ஏற்படுத்திவிட வேண்டும்?

இத்தகு சிந்தனை, பிரிட்டிஷாருக்கு எதனால் எழுந்தது? அயூப் இலண்டனுக்கு வரப்போகிறார் என்ற செய்தி கிடைத்த பின்னர்தான், யூகங்கள் கிளப்பப்பட்டனவா? அல்லது யூகங்கள் எழுந்து, அவைகளின் பூதாகாரமான வடிவத்தின் அருவெறுக்கத்தக்க விளைவுகளுக்குப் பதிலளித்துத் தீரவேண்டிய சட்டாயம் ஏற்பட்டதனால்தான் அயூப் இந்த இலண்டன் பயணத்தை மேற்கொண்டாரா?

இராவல்பிண்டியை, இலண்டன் எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறது; அல்லது பார்க்கத்தொடங்கி இருக்கிறது?

இப்படிப்பட்ட வினாக்கள் விரிவடைந்து செல்வதில் வியப்பில்லை. உரிய-சரியான பதிலைத்தான் பெறுவது கடினமாயிருக்கிறது.

ஆனால் அரசியல் பார்வையாளர்களால் அயூப் பயணம் பற்றி விமர்சிக்கப்பட்டவைகளில்,

தன்மீது இலண்டன் 'ஐயம்' கொண்டிருக்கிறது — இதனைப் போக்கவேண்டும் என்பது அயூப் கருத்து.

தன் நாட்டுக்கு மேலும் பல இராணுவத் தளவாடங்களைக் கேட்டுப் பெற இராவல்பிண்டி விழைகிறது.

கிழக்குப் பாகிஸ்தான், தன் தலைமையை ஒப்புக்கொண்டு, கட்டளைகளுக்குப் பணிந்து போக மறுக்கிறது — சுயாட்சி கோருகிறது—என்பதனை மறுத்துரைக்க வேண்டும்.

சீன-பாக் உறவு நிலைபற்றியும, இந்திய-பாக் உறவு நிலை பற்றியும் தெளிவிக்கவேண்டிய நிர்பந்தம்

போன்ற பல காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. என்றாலும் இத்தகைய நிர்பந்த நிலைகள் எதன் அடிப்படையில் எழுந்தன — ஏற்பட்டன என்பதற்கான விளக்கம் கிடைக்கப்பெறவில்லை.

சீட்டோ, செண்டோ உறவு முறைகளால், பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே எழுந்துள்ள பிணக்கிற்கு முடிவு காண முடியாமற்போன நிலைமையால் அந்த கூட்டில்தான் மேலும் நீடித்துக் கொண்டிருக்க வேண்டுமா? என்ற கருத்திற்கு ஒரு தெளிவு தேடிக்கொள்ள வேண்டிய ஒரு அவசியம் கூட அயூபுக்கு ஏற்பட்டிருந்ததென்று கூட தெரிகிறது.

இத்தகைய குழப்ப நிலையில் அயூப் இலண்டன் சென்று, எதனைச் சாதித்துத் திருப்பி இருக்கிறார்?

ஆழ்ந்தகழ்ந்து ஆராய்ந்தால், 'பாகிஸ்தான்' என்ற நாட்டையே உருவாக்கிய 'பிதாக்கள்' ஆங்கிலேயர்கள். உருவாகிவிட்ட பின்னர், அதன் அடக்கம் செய்யப்பட்ட வரலாறு இனி கிளப்பப்படத் தேவையில்லை.

ஆனால், உருவாக்கிய ஆங்கிலேயர்கள், உருவான, விவகாரங்களுக்குச் செவிமடுக்க அல்லது 'கண் வைக்க' வேண்டிய நிலைமையும் உலக அரங்கத்தில் சரியாகவோ. தவருக ஏற்பட்டுவிட்டது!

சீன-பாக் தொடர்புபற்றி இலண்டன் அக்கறை காட்டவில்லை என்று ஒருசில பார்வையாளர்கள் கருத்துக் கூறியிருக்கிறார்கள். வேறு சிலர், அந்த உறவு குறித்து இங்கிலாந்து ஐயுறவு கொள்கிறது என்றும் கருதுகிறார்கள்.

ஒரு விவகாரம், இருவேறுபட்ட கருத்துக்கு இலக்காகி யூகங்கள் பரவ, இடந்தந்துவிட்ட நிலையில் தெளிவுபடுத்த வேண்டிய கடமை அயூப்பிற்கு உண்டு. தன் பயணத்தில், அதனைத் தெளிவும் படுத்தியிருக்கிறார். எப்படி?

உலகப் பெரும் வல்லரசுகள் என்று கருதப்படும் ரஷ்ய, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குச் சமதையாக இன்னும் 10, 15 ஆண்டுகளில் சீனு வளரவேண்டும் என்று விரும்புகிறது—என்று.

சீனுவின் உட்கிடக்கையையே பிரதிநிதி அறிவிப்பதைப்போல, பாக் அதிபர் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், ஆசியாவின் அமைதியைக் கெடுக்கும் தன் பங்கு பற்றிய பேச்சில், இந்தயாதான் சமாதானத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறது என்றும் விளக்கி இருக்கிறார்.

அதே வேளையில், உலகச் சமாதானத்துக்குப் பேரபாயமாக நாளுக்கு நாள் ஆதிக்கத்தில் வளர்ந்துவரும் சீனுவிடமிருந்து தான் பெற்றுள்ள யுத்தத் தளவாடங்கள் பற்றியும் சொல்லாமலிருக்கமாட்டார்! அல்லது வில்சனோ, அவரது குழுவினரில் ஒரு அதிகாரியோ, கேட்டாவது இருக்க வேணடும். அதிலே கிடைத்த பதில் அயூபின் அந்தக் குற்றச்சாட்டிற்குப் பதில் தருவதாகவும் இருந்திருக்கும்!

காஷ்மீர் விவகாரத்தைத் தீர்க்துக்கொள்ள போர் உதவியாதிராது என்று நம்புமு அவர், இலண்டன் பயணத்தோடு பயணமாக, வேறு பல நாடுகளுக்கும் சென்று, இராணுவ தளவாட உதவிகள் கேட்க முயலுவதான நிலை— இதனை மெய்ப்பிக்கத்தக்க சான்ருகவும் இருக்கும்.

(13-ம் பக்கம் பார்க்க)

சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்